சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள்: 21.01.2026

பி.வா.சா.2 – பெருமாள் S/o.அழகன்

O.S. No.210/2024

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

இந்த வழக்கை நீலாவதி, செல்லத்தம்மாள் பாகத்திற்காக தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் சரிதான். வாதி மற்றும் பிரதிவாதி குடும்பத்தினருக்கு இடையே ஏற்கனவே பாகம் ஏற்பட்டு பாகவிஸ்தி எழுதப்பட்டதா என்றால் அதுபற்றி தெரியாது. ஆனால் செல்லத்தம்மாள் 2ம் பிரதிவாதிக்கு திருமணம் முடித்துசெல்லும் போது அவரது தந்தையார் 51 செண்டை பாகமாக பிரித்து கொடுத்துவிட்டார். நீலாவதி சின்னம்மா பிள்ளைகளோடு சேர்ந்து இருந்து கொள்வதாக கூறியதால் அவருக்கு கொடுக்கவில்லை. 20 ஆண்டு கழித்த செல்லத்தம்மாள் மீண்டும் பிரச்சினை செய்து கொண்டு வரும் போது அவருடன் நீலாவதியும் சேர்ந்து கொண்டார். 51 செண்டு செல்லத்தம்மாளுக்கு கொடுக்கப்பட்டது அவருடைய தந்தையான மாணிக்கத்திற்கு சொந்தமான சொத்தாகும். மேற்படி 51 செண்டு செல்லத்தம்மாளுக்கு கொடுக்கப்பட்டதை பொறுத்து மாணிக்கத்திற்கு தான் சொத்து பாத்தியம் என்பதை நிருபிக்க ஆவணம் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் ஆவணம் பார்க்கவில்லை, பஞ்சாயத்தில் சொல்லிய போது கேட்டேன். 1ம் பிரதிவாதி முத்துச்சாமிக்கும் அவரது சகோதரரான 4ம் பிரதிவாதி முருகேசனுக்கும் இடையே பாக வழக்கு ஒன்று ஏற்கனவே நடந்தது தெரியுமா என்றால் தெரியாது. அடிப்படை ஆதாரங்கள் பார்க்காமலும் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக அவர்கள்

கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.01.21 21:58:54 +0530

Sub Judge

Melur